**சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்.**
**முன்னிலை : திரு.எம்.சிவாஜி செல்லையா, L.L.M.,**
**சார்பு நீதிபதி, உத்தமபாளையம்.**
**2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12 ம் நாள் புதன்கிழமை**

**அசல் வழக்கு எண்.105/2022**
***(CNR No. TNTH050001962022)***

1. K.நீலாவதி(*)(இறப்பு)(*)
2. (*) K.குமரேசன்
3. (*) K.பிரகலாதன் ... **வாதிகள்**

(*) வழக்கு நிலுவையிலிருக்கும்போது 1ம் வாதி கடந்த 14.07.2024ம் தேதியன்று காலமாகிவிட்டார். 1ம் வாதியின் சட்டப்படியான வாரிசுகளை இந்த அசல்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கக்கோரி இ.ம.எண்.2/2024(Or.22 R.3 and Sec.151 of CPC) மனுவானது தாக்கல் செய்யப்பட்டு, அது கடந்த 18.09.2024ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்த அசல்வழக்கில் 2, 3 வாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் மற்றும் இ.ம.எண்.4/2025(Or6 R17of CPC) மனுவானது கடந்த 05.04.2025ல் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் அசல்வழக்கின் பிராதில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

/ எதிர் /

1. H.சுமதி
2. (*)பாலமுருகன் ... **பிரதிவாதிகள்**

(*) ஆரம்பத்தில் அசல்வழக்கு தாக்கல் செய்யும்போது 2ம் பிரதிவாதி மைனராக இருந்ததால் மேற்படி 2ம் பிரதிவாதிக்கு அவரது தாயாரும், கார்டியனுமாக 1ம் பிரதிவாதி இருந்து இந்த வழக்கை மேல்நடத்தி வந்தார் என்றும், இந்நிலையில் 2ம் பிரதிவாதி சட்டப்படியான வயதை அடைந்துவிட்டதால், 2ம் பிரதிவாதிக்கு இயற்கை காப்பாளராக உள்ள 1ம் பிரதிவாதியினுடைய இயற்கை காப்பாளர் மற்றும் அடுத்த சிநேகிதி என்ற தகுதியை நீக்கியும், 2ம் பிரதிவாதி உரிய வயதை அடைந்துவிட்டார் என்று விளம்புகை செய்ய வேண்டி இ.ம.எண்.3/2024(Or.32 R.9 of CPC) என்ற மனுவானது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அது கடந்த 03.02.2025ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இ.ம.எண்.4/2025(Or6 R17of CPC) மனு

தாக்கல் செய்யப்பட்டு, அது கடந்த 05.04.2025 ல் அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் அசல்வழக்கில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வழக்கு என் முன்பாக 15.07.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.உமாபதி, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. P.ராஜமோகன், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இதுநாள் வரை வழக்கின் ஆவணங்கள் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும் ...

## தீர்ப்புரை

இந்த அசல் வழக்கானது வழக்குரை சொத்தினைப் பொறுத்து, வாதிகளுக்குரிய 1/2 பங்கு உரிமை மற்றும் பாகப்பங்கை வீடு, தகிடு கலந்து பிரதிவாதிகள் நயமிடர் பார்த்து பிரித்து பிரிபட்ட பாகத்தை வாதி வசம் நீதிமன்றம் குறிப்பிடும் கால அவகாசத்திற்குள் பிரதிவாதிகள் பிரித்துக்கொடுத்து, வாதிகளுக்கு பிரிப்பட்ட தனித்த சுவாதீன வழங்கி வாதிகளுக்கு ஆதரவாக முதல்நிலை தீர்ப்பாணை வழங்க வேண்டியும், பிரதிவாதிகள் அவ்வாறு செய்யத்தவறும்பட்சத்தில் வாதிகள் நீதிமன்றத்தின்மூலம் இறுதிநிலை தீர்ப்பாணைக்காக மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ள அனுமதி அளிக்க வேண்டியும் மற்றும் செலவுத்தொகை கோரியும் வாதிகளால் பிரதிவாதிகளுக்கெதிராக இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம் :**

வழக்குரை சொத்துக்களும் வேறு இதர சொத்துகளும், ஆதியில், கா.கணக்கயகவுடர் என்பவருக்கு பாத்தியப்பட்டது ஆகும். அவ்வாறான அனைத்து சொத்துக்களையும் கணக்கயகவுடரும், அவரின் மக்களான க.லச்சுமையகவுடர் க.கிருஷ்ணசாமிகவுடர், க.கோபால் ஆகியோர்களும் ஒன்று சேர்ந்து கூட்டுக்குடும்ப சொத்துக்களாகவே பாவித்து, அனைத்து சொத்துகளையும் அனுபவித்தும் வந்தனர். அவ்வாறு அனுபவித்து வந்தபோது. கணக்கயகவுடர் அவர்கள், பல ஆண்டுகளுக்கு முன்பே காலமாகிவிட்டார். அதன்பின்னிட்டு, கூட்டுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட அசையா சொத்துகளை கணக்கயகவுடர் வாரிசுகளான க.லச்சுமையகவுடர் க.கிருஷ்ணசாமிகவுடர் மற்றும் க.கோபால் ஆகியோர்கள் தங்களுக்கு இடையே கடந்த

04.05.1970 ஆம் தேதியன்று பதிவுபாகம் செய்து கொண்டனர்.

அவ்வாறான 04.05.1970ம் தேதிய பாகப்பத்திரத்தில், க.கோபால் என்பவருக்கு. பதிவு "C" செடியூல் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது. ஷை க.கோபால் என்பவரின் மகளும் நேரடி வாரிசும்தான் 01-ம் வாதி ஆவார். 01-ம் வாதியின் தகப்பனாரான க.கோபால் என்பவருக்கு, பார்வதி என்ற தாயாரும், கோ.மாரியம்மாள் என்ற மனைவியும், ஹரிதேவன் என்ற மகனும், 01-ம் வாதியும் மட்டுமே நேரடி வாரிசுகள் ஆவார்கள் க.கோபாலின் அம்மாவான பார்வதி அவர்கள், க.கோபால் அவர்கள் இறப்பதற்கு முன்பே காலமாகிவிட்டார். க.கோபாலின் மனைவியும், 01-ம் வாதியின் தாயாருமான கோ.மாரியம்மாள் கடந்த 23.07.2021-ம் தேதியன்று காலமாகிவிட்டார் (மாரியம்மாள் அவர்கள் காலமானதற்கு, 01-ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை இருக்கப் போவதில்லை) க.கோபாலின் மகனும், 01-ம் வாதியின் சகோதாரருமான ஹரிதேவன் அவர்கள், கடந்த 26.11.2019-ஆம் தேதியன்று காலமாகிவிட்டார்.

க.கோபால் அவர்கள் சம்பந்தப்பட்ட 14.03.2020ம் தேதியிட்ட வாரிசு சான்றிதழில் க.கோபால் அவர்களின் அம்மா பார்வதி, மனைவி கோ.மாரியம்மாள், மகன் ஹரிதேவன், 01ம் வாதி நீலாவதி பெயர்களும் வாரிசுதாரர்களாக காட்டப்பட்டுள்ளது. பார்வதி அவர்கள் காலமாகிவிட்டதால், 01ம் வாதியும், தாயார் மாரியம்மாளும் ஹரிதேவனும் வாரிசுகளாக வாரிசு சான்றிதழில் கூறப்பட்டுள்ளனர். ஹரிதேவன் அவர்கள் கடந்த 26.11.2019ம் தேதியன்று காலமானபின்பு, 19.12.2019ம் தேதியன்று வாரிசு சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. அந்த வாரிசு சான்றிதழில், மாரியம்மாள்(அம்மா), பிரதிவாதிகள் மற்றும் சிறுவயதிலேயே காலமான மைனர் தமிழ்செல்வனின் பெயரும், ஹரிதேவனின் வாரிசுகளாக காட்டப்பட்டுள்ளனர். எனவே, கோபால் மற்றும் ஹரிதேவன் அவர்களின் வாரிசுசான்றிதழ்களின்படி கோ.மாரியம்மாள், 1ம் வாதி, பிரதிவாதிகள் மட்டுமே வாரிசுகள் ஆவார்கள். தற்போது, கோ.மாரியம்மாள் அவர்களும், கடந்த 23.07.2021ம் தேதியன்று காலமாகிவிட்டதால், 1ம் வாதி மற்றும் பிரதிவாதிகள் மட்டுமே வாரிசுகள் ஆவார்கள்.

கடந்த 04.05.1970-ஆம் தேதிய பதிவு பாகப்பத்திர ஆவணத்தில் "சி" செடியூல் சொத்தில் க.கோபால் என்பவருக்கு வழக்குரை சொத்தானது 02-வது லக்க சொத்தாக கிடைத்தது ஆகும். "சி" செடியூலில் கண்ட 01, 03, 04-லக்க சொத்துக்கள் அனைத்தும். கணக்கயகவுடர் அவர்களால், அவர் உயிருடன் இருந்தபோதே. 01-ம் வாதியும். 01-ம்

வாதியின் சகோதரரான ஹரிதேவனும், 01–ம் வாதியின் தாயாரான மாரியம்மாள் அவர்களும் அறிய விற்கப்பட்டு, அதற்கான ஈவு தொகைகளை அப்போதிருந்த வாரிசுகளுக்கு, க.கோபால் அவர்கள் பிரித்துக் கொடுத்துவிட்டார். இந்த சொத்துக்கள் விற்கப்பட்டதைப் பொறுத்து, பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபணைகளும் இருக்கப் போவதில்லை.

பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்ட சி.ஷெடியுலில் கண்ட இதர சொத்துக்கள் விற்கப்பட்டு விட்டதால் தற்போது, வழக்குரை சொத்து மட்டுமே மீதம் உள்ளது. அவ்வாறான வழக்குரை சொத்தினை, கூட்டுக்குடும்ப பிரிவினையில்லாத சொத்தாக பாவித்து, க.கோபால் அவர்களின் தாயாரின் இறப்பிற்கு பின்பு, க.கோபால் அவர்களின் மனைவியும், 01ம் வாதியின் தாயாருமான மாரியம்மாள் அவர்களும், மகளான 01ம் வாதியும், மகனான ஹரிதேவனும் கூட்டாக சேர்ந்து கூட்டு குடும்ப பிரிவினையில்லாத சொத்தாக பாவித்து ஆண்டு அனுபவித்து வந்தனர். க.கோபால் அவர்களின் மகனும், 01–ம் வாதியின் சகோதரரான ஹரிதேவன் அவர்களும், கடந்த 26.11.2019–ஆம் தேதியன்று காலமாகிவிட்டார். அவரது வாரிசுசான்றிதழில் இறந்துபோன மாரியம்மாள்(அம்மா)–1, 1ம் பிரதிவாதி சுமதி(மனைவி)–2, 2ம் பிரதிவாதி பாலமுருகன்–3, சிறுவயதிலேயே காலமான மைனர் தமிழ்செல்வன்–4 ஆகிய பெயரும், ஹரிதேவனின் வாரிசுகளாக காட்டப்பட்டுள்ளனர். எனவே, காலம் சென்ற ஹரிதேவனுக்கு தற்போது, பிரதிவாதிகள் மட்டுமே நேரடிவாரிசுகள் ஆவார்கள்.

வழக்குரை சொத்தானது 1ம் வாதி, பிரதிவாதிகள் மற்றும் காலம் சென்ற மாரியம்மாள் ஆகியோர்களால் நேரடி வாரிசுகள் என்ற முறையில் கூட்டாக பிரிவினையின்றி அனுபவித்து வரப்படுகிறது. அதாவது 1ம் வாதியும், பிரதிவாதிகளும், காலம் சென்ற கோ.மாரியம்மாள் அவர்களும் சேர்ந்து வழக்குரை சொத்திற்கு வடபக்கம் உள்ள 111 சதுரடி பாதையிடத்தை கடந்த 18.03.2020ம் தேதியன்று கம்பத்தை சேர்ந்த சரண்யா என்பவருக்கு பதிவுக்கிரையம் செய்து விட்டனர். இந்த பதிவுக்கிரைய ஆவணமானது 1ம் வாதியின் பிரிவினையில்லா பாகபங்கையும் வழக்குரை சொத்தின் சுவாதீனமானது 1ம் வாதியின் கூட்டு சுவாதீன அனுபவத்தில் உள்ளது என்பதையும் நிரூபணம் செய்யும் ஆவணம் ஆகும்.

தற்போது, 01-ம் வாதியின் தாயாரான மாரியம்மாள் கடந்த 23.07.2021-அவர்கள். தேதியன்று காலமாகிவிட்டபடியால், வழக்குரை சொத்திற்கு, 01-ம் வாதியும், பிரதிவாதிகளும் மட்டுமே வாரிசுதாரர்கள் ஆவார்கள். 01-ம் வாதியின் தாயார் உயிருடன் இருந்தவரை, 1-ம் பிரதிவாதியும், 01-ம் வாதியின் தாயாரும், தனித்த பிரிபட்ட பாகத்தை பிரித்துக் கொள்ளலாம் என்று கூறியே. வீண்காலம் கடத்தி வந்தார்கள். அதன்பின்னர், 01-வாதியின் தாயாரும், 1-பிரதிவாதியின் மாமியாருமான திருமதி.கோ.மாரியம்மாள, கடந்த 23.07.2021-ம் தேதியன்று காலமாகிவிட்டார். அதன்பின்னர், 01-ம் வாதி, 1-ம் பிரதிவாதியை, நேரிலும், ஆட்கள் மூலமும் அணுகி வழக்குரை சொத்தினை நயமிடர் பார்த்து ஆளுக்கு சரிபாதியாக பிரித்துக் கொள்ளலாம் என்று கேட்டதற்கு, 1-ம் பிரதிவாதி, வீண்காலம் கடத்தியே வந்தார் அதனால், 01-ம் வாதி, இறுதியாக, 1-ம் பிரதிவாதியை கடந்த 25.12.2021ஆம் தேதியன்று நேரில் சென்று சந்தித்து பாகம் கேட்டதற்கு 1ம்பிரதிவாதி "பாகமெல்லாம் பிரித்து தரமுடியாது எனக்கூறியதால், வேறுவழியின்றி வழக்குரை சொத்தினைப் பொறுத்து சட்டப்படியான பாகத்தை பெறுவதற்காக வேண்டி வாதிகள் அசல்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். ஏற்கனவே, 01-ம் வாதி. 1-ம் பிரதிவாதி மற்றும் காலம் சென்ற மாரியம்மாள் ஆகியோர்கள் சரண்யா என்பவருக்கு கிரையம் செய்த 111 சதுரடி இடம் தவிர, மீதமுள்ள சொத்தே வழக்குரை சொத்து ஆகும். எனவே, வழக்குரை சொத்தினைப் பொறுத்து, 01-ம் வாதிக்கு, சட்டப்படி சரிபாதி பாகப்பங்கு சித்திரித்து உள்ளது. வழக்குரை சொத்தினைப் பொறுத்து, வாதிக்குரிய ½ பங்கு சரிசம பாகத்தை, பிரதிவாதிகளிடம் இருந்து நயமிடர் பார்த்து பிரித்து தனித்த சுவாதீனம் வேண்டி, வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

3. <u>பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:-</u>

தாவா சட்டப்படிக்கும், பொருண்மைப்படிக்கும் நிலைக்கத் தக்கதல்ல.பிரதிவாதிகளால் எதிர்வழக்குரையில் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர பிராதில் கூறியுள்ள மற்ற சங்கதிகளை வாதிகளே நிரூபிக்கக் கடமைப்பட்டவாராவார்கள். உண்மைநிலை என்னவெனில் காலம் சென்ற திரு.கோபால் அவர்களின் மனைவியான 1)கோ.மாரியம்மாள் (வாதியின் தாயார்) 2) ஹரிதேவன் (வாதியின் சகோதரர்) 3) வாதி மற்றும் இவ்வழக்கின் வாதி ஆகியோர்கள்

கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்த காலத்தில், மேற்படி ஹரிதேவன். அவரது மனைவியான 1ம் பிரதிவாதி மற்றும் வாதியின் தாயாரான கோ.மாரியம்மாள் ஆகியோர்களின் அனைத்து வருமானங்களைக் கொண்டு, வாதியின் திருமணத்தின்போது சுமார் 10 பவுன் எடையுள்ள தங்க நகைகளும் சீதனமாக ரூபாய் 15,000/— பெறுமான பண்டப்பாத்திரங்களும் கொடுக்கப்பட்டது.

இவ்வழக்கின் வாதியின் கணவரான திரு S.K.குமரேசன் அவர்கள், மேற்படி திருமணத்திற்கு 1—ம் பிரதிவாதியின் கணவரிடம் பலமுறை அவ்வப்போது குடும்ப செலவிற்கு பணம் பெற்று வரும் வழக்கத்தினை கையாண்டு வந்தார். 1—ம் பிரதிவாதியின் கணவரான ஹரிதேவன் அவர்கள் உடன்பிறந்த சகோதரியான இவ்வழக்கின் வாதிக்கு அன்பினாலும், பாசத்தினாலும் தனது வருமானத்தின் பெரும்பகுதியை கொடுத்து வந்தார். இந்நிலையில், ஹரிதேவன் அவர்கள், சகோதரியின் வாழ்வு நலமாக இருக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் சுமார் ரூபாய் 5 லட்சத்திற்கு கம்பம் நகரில் காலிமனையிடத்தினை தனது சொந்த வருமானத்தின் மூலம் வாதிக்காக கிரையமாக வாங்கிக் கொடுத்தார். மேற்படி காலிமனையிடத்தில் வீடு கட்டுவதற்குண்டான அனைத்து பொருட்களையும் இவ்வழக்கின் 1—ம் பிரதிவாதியின் கணவரான மேற்படி ஹரிதேவன் பெற்றுக்கொடுத்தார். இவ்வாறாக மேற்படி ஹரிதேவன், சகோதரியான இவ்வழக்கின் வாதி குடும்பத்தின் மீது அக்கரை கொண்டு வாழ்ந்து வந்த காலத்தில் அவருக்கு இருதயக் கோளாறு ஏற்பட்டும். மூளையில் நரம்பு பாதிப்பு ஏற்படும் நீண்ட நாள் மருத்துவ சிகிச்சையில் இருந்து இறுதியாக கடந்த 26.11.2019—ம் தேதியன்று காலமாகிவிட்டார்.

1ம் பிரதிவாதிக்கும் மேற்படி ஹரிதேவனுக்கும் பிறந்த தமிழ்செல்வன் என்ற மகன் தனது 15 வயதில் உடம்பில் வெள்ளை அணுக்கள் பாதிக்கப்பட்டு கடந்த 04.09.2015ம் காலமாகிவிட்டார். மேற்பண்ட மருத்துவசிகிச்சைக்கு இந்த 1ம் பிரதிவாதி சுமார் ரூ.13,00,000/—ம் கடன் பெற்று அதற்கான வட்டியும் இதுநாள் வரை செலுத்தி வருகிறார்.

உண்மைநிலை என்னவெனில். இவ்வழக்கின் வாதியும் வாதியின் கணவரும். மேற்படி உண்மைகளை மறைத்து வாதியின் கணவர் வாதிக்காக கடத்த 04.08.2015ம் தேதியிட்டு பாக உரிமை கோரி மேற்படி ஹரிதேவனுக்கும். இவரது தாயார் திருமதி மாரியம்மாளுக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தார். மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்ட மேற்படி ஹரிதேவன் இதுசம்பந்தமாக கம்பம் மற்றும் கூடலூர் நகரில்

உள்ள சமுதாய பெரியோர்களிடம் முறையிட்டதில் கடந்த டிசம்பர் மாதம் 2015–ம் ஆண்டில் மேற்படி கோபால் அவர்களின் குடும்பச்சொத்துக்களைப் பொறுத்து ஒரு பஞ்சாயத்து ஏற்பட்டது. மேற்படி பஞ்சாயத்து கம்பம் நகரில் நடைபெற்றது. மேற்படி பஞ்சாயத்தில் 1) சிவக்குமார், த/பெ.முத்துராஜ், கூடலூர், 2) R.முருகன், /பெ.ராமலிங்கம், கூடலூர், 3) R.முருகன், த/பெ.ராஜ்கவுடர், கூடலூர் ஆகியோர்களும், ஹரிதேவன், இவ்வழக்கினை வாதி, வாதியின் தாயார் மாரியம்மாள் ஆகியோர்களும், மற்றும் சிலரும் கலந்து கொண்டார்கள் மேற்படி பஞ்சாயத்தில் இறந்த கோபால் அவர்களின் குடும்பச் சொத்துக்களாக 1) பூர்வீக வீட்டினையும் 2) வாதிக்காக கிரையம் பெற்ற வீட்டினையும் கணக்கீடு செய்தும் பொதுக்குடும்பக் கடனையும் கருத்தில் கொண்டும் ஒரு குடும்ப ஏற்பாடு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. 1) ஹரிதேவன் குடியிருந்துவரும் பூர்வீக வீட்டினை ஹரிதேவனுக்கு முழு பாகமாக ஒதுக்கப்பட்டும். பொதுக் குடும்பக் கடன்களை ஹரிதேவனே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், மற்றும் ஹரிதேவனின் தாயார் மாரியம்மாள் அவர்களை அவரது ஆயுள் காலம் வரை ஹரிதேவன் பராமரித்துக் கொள்ள வேண்டும் என்றும், மற்றும் 2) நீலாவதி (வாதி)க்கு கொடுத்துள்ள வீட்டினை அதாவது அவர் குடியிருந்துவரும் வீட்டினை, மேற்படி நீலாவதியே சர்வ சுதந்திரமாக அடைந்து கொள்வதென்றும் பேசி முடிக்கப்பட்டது.

மேற்படி பஞ்சாயத்தில் ஏற்பட்ட முடிவுகளை "குடும்ப ஏற்பாடு ஒப்பந்தத்தினை மேற்படி அனைத்து தரப்பினர்களுக்கும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார்கள் மேற்சொன்ன குடும்ப ஏற்பாட்டின்படி இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதி, பொதுக்குடும்பத்தில் ஏற்பட்ட கடன்களை இதுநாள் வரை செலுத்தி வருகின்றார். மேற்படி குடும்ப ஏற்பாடு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது மேற்படி ஹரிதேவன் மற்றும் அவரது தாயார் கோ.மாரியம்மாள் கடந்த 23.07.2021–ம் தேதியன்று காலமான பின்பே மேற்படி உண்மைகளை மறைத்து வாதியால் இவ்வழக்கு சட்ட விரோத இலாபம் அடையும் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிக்கு இவ்வழக்கை தாக்கல் செய்ய எவ்வித உரிமையும் இல்லை. வாதி கூறியுள்ள வழக்குமூலம் பொய்யானது ஆகும். அதனடிப்படையில் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்க ஒன்றாகும். வாதி இவ்வழக்கிற்கு செலுத்தியுள்ள நீதிமன்றக்கட்டணம் சரியல்ல. ஆகவே, வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4.** வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் வழக்கு ஆவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் வழக்கின் தீர்விற்காக கடந்த 30.01.2024–ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டுள்ளது.

1. வழக்குச் சொத்தில் வாதிகளுக்கு ½ (பாதி) பங்கு பெறுவதற்கான உரிமை உள்ளதா?
2. வாதிகள் கோரியபடி முதல்நிலை தீர்ப்பாணை (Preliminary Decree) பெறுவதற்கான உரிமை உள்ளதா?
3. வாதிகளின் குடும்பத்தில், 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், கூடலூரில் குடும்பப் பெரியோர்கள் முன்னிலையில் குடும்ப ஏற்பாடு (Family Arrangement) நடைபெற்றதா?
4. வாதிகள் வேறு ஏதேனும் நிவாரணம் பெறுவதற்கு உரிமையுடையவர்களா?

**5.** இவ்வழக்கில் வாதிகள் தரப்பில், 1ம் வாதி நீலாவதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு குமரேசன் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி சுமதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு சிவக்குமார் என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

**<u>6. எழு வினா எண் 1 முதல் 3 ற்க்கான தீர்வு :</u>**

வழக்குச் சொத்தில் வாதிகளுக்கு ½ (பாதி) பங்கு பெறுவதற்கான உரிமை உள்ளதா? ,வாதிகள் கோரியபடி முதல்நிலை தீர்ப்பாணை (Preliminary Decree) பெறுவதற்கான உரிமை உள்ளதா? வாதிகளின் குடும்பத்தில், 2015 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், கூடலூரில் குடும்பப் பெரியோர்கள் முன்னிலையில் குடும்ப ஏற்பாடு (Family Arrangement) நடைபெற்றதா? என்பது குறித்து தீர்வு காண வழக்காவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**7.** கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில், வழக்குச்சொத்துக்களும், வேறு குடும்பச்சொத்துக்களும் கணக்காயகவுடருக்கு பாத்தியப்பட்டது என்றும், அவருக்கு லச்சுமயக்கவுடர்–1, கிருஷ்ணசாமி கவுடர்–2, கோபால்கவுடர்–3 ஆகியோர்கள் வாரிசுகள் என்றும், மேற்படியார்களின் தகப்பனார் இறந்தபின்னர், கடந்த 04.05.1970ல் வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணம் மூலம் மேற்படியார்கள் பாகம் செய்துகொண்டனர் என்றும், மேற்படி பாகப்பிரிவினை

ஆவணத்தின்படி கண்ட "சி" செடியூல் சொத்து வழக்குச்சொத்து 2 வது இலக்கச்சொத்தாக கோபால் கவுடர் பாகத்திற்கு கிடைத்தது என்றும், மேற்படி கோபால் கவுடர் அவரது தாயார் பார்வதி அம்மாள், மனைவி மாரியம்மாள், மகன் ஹரிதேவன், வாதி ஆகியோர்களை தனது அடுத்த வாரிசுகளாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், அதில் பார்வதி அம்மாளும், மாரியம்மாளும் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னரே காலமாகிவிட்டனர் என்றும், மேற்படியாரின் மகனான ஹரிதேவனும் கடந்த 26.11.2019 ம் தேதியன்று அவரது மனைவியான 1 ம் பிரதிவாதியையும், மகனான 2 ம் பிரதிவாதியையும் தனது அடுத்த வாரிசாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், எனவே, கோபால் கவுடருக்கு வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணம் மூலம் பாத்தியப்பட்ட இவ்வழக்குச்சொத்தில் அவரது மகளான வாதிக்கு ½ பங்கும், ஹரிதேவனின் வாரிசுகளான பிரதிவாதிகளுக்கு ½ பங்கும் பாத்தியப்பட்டது என வாதிட்டார்.

**8.** இறுதியாக, கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கு 2,3 வாதிகள் 1 ம் வாதி நீலாவதியின் வாரிசுகள் என்றும், 1 ம் வாதி நீலாவதிக்கு அவர் தந்தை கோபால்கவுடர் சொத்தில் பாதி பங்கு உரிமை இருந்ததால்தான் 18.03.2020 ல் சரண்யா என்பவருக்கு 1 ம் வாதியும், பிரதிவாதிகளும் சேர்ந்து கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றும், பிரதிவாதிகள் கட்சி செய்வதுபோல், கோபால் கவுடரின் குடும்பச்சொத்துக்கள் 2015 டிசம்பர் மாதம் பஞ்சாயத்தார்கள் முன்பு பாகம் செய்யப்படவில்லை என்றும், மேற்படி பஞ்சாயத்து நடைபெற்றதாக சொல்வது வழக்குச்சொத்தில் வாதிகளுக்குரிய ½ பாகத்தை மறுப்பதற்காக சொல்லப்பட்ட எதிர்வாதம் என்றும், எனவே, 1 ம் வாதி கோபால் கவுடரின் நேரடி வாரிசு என்ற நிலையில், அவருக்குரிய ½ பாகம் அவரது வாரிசுகளான வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என வாதிட்டார்.

**9.** அதற்குமாறாக, பிரதிவாதிகள் தரப்பு மூத்த வழக்கறிஞர் தனது வாதத்தில், வாதிகள் பிராதில் சொல்லியுள்ள உறவுமுறைகள் உண்மை என்றும், ஆனால், குடும்பத்தில் 2015 டிசம்பர் மாதம் கூடலூரிலுள்ள சமுதாயப் பெரியோர்களான பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட சிவக்குமார், முருகன், த/பெ.இராமலிங்கம், முருகன்,த/பெ.ராஜ்கவுடர் ஆகியோர் முன்னிலையில் சமாதானம் பேசப்பட்டு,

வழக்குச்சொத்து ஹரிதேவன் பாகத்திற்கு என்றும், 1ம் வாதி நீலாவதிக்கு கொடுத்த வீட்டை அவரே அடைந்து அனுபவிக்க வேண்டுமென்றும் பேசிமுடிக்கப்பட்டு, ஏற்கனவே குடும்பச்சொத்துக்கள் பாகப்பிரிவினை செய்யப்பட்டுவிட்ட நிலையில், அதை மறைத்து வாதிகள் தாக்கல் செய்துள்ள பாகவழக்கு சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றும், குடும்பத்தில் ஏற்கனவே பாகப்பிரிவினை நடைபெற்றுவிட்டது என்பதை பி.வா.சா.1,2 வாய்மொழி சாட்சியங்கள் மூலமும், பி.வா.சா.ஆ.,1 முதல் 5 வரையிலான ஆவண சாட்சியங்கள் மூலமும் நிரூபணம்செய்யப்பட்டுள்ள நிலையில், வாதிகளின் வழக்கை பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென வாதிட்டார்.

**10** இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கில் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட வழக்கு என்பது, வழக்குச்சொத்துக்களும், வேறு குடும்பச்சொத்துக்களும் கணக்காயகவுடருக்கு பாத்தியப்பட்டது என்பதும், அவருக்கு லச்சுமயக்கவுடர்–1, கிருஷ்ணசாமி கவுடர்–2, கோபால்கவுடர்–3 ஆகியோர்கள் வாரிசுகள் என்பதும், மேற்படியார்களின் தகப்பனார் இறந்தபின்னர், அவர்கள் கடந்த 04.05.1970 ல் வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணம் மூலம் மேற்படியார்கள் பாகம் செய்துகொண்டனர் என்பதும், மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தின்படி கண்ட "சி" செடியூல் 2வது இலக்கச்சொத்துதான் இவ்வழக்கு சொத்து கோபால் கவுடர் பாகத்திற்கு கிடைத்தது என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

**11.** அதேபோல், மேற்படி கோபால் கவுடர் என்பவருக்கு பார்வதி என்ற தாயாரும், கோ.மாரியம்மாள் என்ற மனைவியும், ஹரிதேவன் என்ற மகனும், 01–ம் வாதியும் வாரிசுகள் என்பதும், இவர்களில் க.கோபாலின் அம்மாவான பார்வதி அவர்கள், க.கோபால் அவர்கள் இறப்பதற்கு முன்பே காலமாகிவிட்டார் என்பதும், க.கோபாலின் மனைவியும், 01–ம் வாதியின் தாயாருமான கோ.மாரியம்மாள் கடந்த 23.07.2021–ம் தேதியன்று காலமாகிவிட்டார் என்பதும், க.கோபாலின் மகனும், 01–ம் வாதியின் சகோதாரருமான ஹரிதேவன் அவர்கள், கடந்த 26.11.2019–ஆம் தேதியன்று காலமாகிவிட்டார் என்பதும், இறந்துபோன ஹரிதேவனுக்கு 1ம் பிரதிவாதி சுமதி, 2ம் பிரதிவாதி–பாலமுருகன், இறந்துபோன தமிழ்செல்வன்–4 ஆகியோர்கள் வாரிசுகளாக

உள்ளார்கள், எனவே காலம் சென்ற ஹரிதேவனுக்கு தற்போது பிரதிவாதிகள் மட்டுமே வாரிசுகள் என்பதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

**12.** ஆகையால், வழக்குச்சொத்துக்கள் கடந்த 04.05.1970ம் தேதிய பாகப்பத்திரத்தில் கண்ட "C" செடியூல் சொத்துக்கள் க.கோபால் கவுடர் பாகத்திற்கு கிடைத்தது என்பதும், மேற்படி சி செடியூலில் கண்ட 2வது இலக்கச்சொத்து தான் இவ்வழக்கு சொத்து என்பதும் தெரியவருகிறது. எனவே, இவ்வழக்கில் பிராதில் கூறியுள்ள உறவுமுறைகள் மற்றும் வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணப்படி சி செடியூல் 2வது இலக்கச்சொத்தான இவ்வழக்குச்சொத்தைப் பொறுத்து கோபால் கவுடர் யாதொரு ஆவணமும் எழுதிவைக்காமல் (intestate)ஆக காலமாகிவிட்டார் என்பதும், அவரது காலத்திற்கு பின்னர், அவரது வாரிசுகளான அவரது தாயாரான பார்வதி அம்மாள், மனைவியான மாரியம்மாள், மகனான ஹரிதேவன், மகளான இவ்வழக்கு 1ம் வாதி ஆகியோர்கள் இந்து வாரிசுரிமைச்சட்டப்படி அடைந்து அனுபவித்து வந்துள்ளார்கள் என்பது வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்யும்போது தெரியவருகிறது.

**13.** இந்த வழக்கு எழுவினாக்களில் மிகவும் பிரதானமாக தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் வழக்குச்சொத்து இன்றுவரை பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என 1ம் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்து அவர் இறந்தபின்னர் அவரது வாரிசுகள் இந்த பாகவழக்கில் அவர்களது தாயாருக்குரிய ½ பாகம் வேண்டுமென இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி வாதம் பிரதிவாதிகள் தரப்பில் மறுக்கப்பட்டு, குடும்பச்சொத்துக்கள் ஏற்கனவே 2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பாகம் செய்யப்பட்டு, இவ்வழக்கு சொத்து 1ம் பிரதிவாதியின் கணவரான ஹரிதேவன் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து தீர்வு காண வழக்காவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**14.** இவ்வழக்குச்சொத்துக்கள் வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்ட "சி" ஷெடியூல் 2வது இலக்கச்சொத்து கோபால் கவுடரின் பாகத்திற்கு கிடைத்த தனிப்பட்ட சொத்து என்ற நிலையில், அவர் வழக்குச்சொத்துக்களைப் பொறுத்து, யாதொரு ஆவணமும் எழுதிவைக்காமல் (intestate)ஆக காலமாகிவிட்டதால், திருத்தப்பட்ட இந்து வாரிசுரிமைச்சட்டப்படியும், மாண்புமிகு உச்சநீதிமன்றம் Vineetha

Sharma Vs. Rakesh Sharma reported in 2009 SCC Page-1 என்ற முன்தீர்ப்பின்படியும், இறந்துபோன கோபால்கவுடரின் சொத்தில் அவரது மனைவி மற்றும் தாயார் இறந்துவிட்டநிலையில், அவரது மகனான இறந்துபோன ஹரிதேவனுக்கு ½ பங்கும், மகளான 1ம் வாதி நீலாவதிக்கு ½ பங்கும் உரிமைப்பட்டது என இந்நீதிமன்றம் முதலில் தீர்மானிக்கிறது.

**15.** ஆனால், பிரதிவாதிகள் தரப்பில் மிகவும் பிரதானமாக 1ம் வாதிக்கு தாவா சொத்தில் 1/2 பாகம் இருந்தாலும், குடும்பச்சொத்துக்கள் பாகம் செய்வது குறித்து கடந்த 2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் கூடலூரிலுள்ள சமுதாய பெரியோர்கள் முன்னிலையில் பேசி முடிக்கப்பட்டு, ஒரு குடும்ப ஏற்பாடு ஏற்படுத்தப்பட்டது என்றும், அதன்படி வழக்குச்சொத்து 1ம் பிரதிவாதியின் கணவரான ஹரிதேவனுக்கு முழுமையாகவும், 1ம் வாதி நீலாவதிக்கு பிரதிவாதிகள் குடும்பத்தில் கிரையம் வாங்கிக்கொடுத்துள்ள வீட்டை அவரே அனுபவித்துக்கொள்ளலாம் என பேசி முடிக்கப்பட்டது என்றும், எனவே, ஏற்கனவே பாகமான சொத்தைப் பொறுத்து, மீண்டும் பாகவழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என பிரதான எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. எனவே, குடும்பச்சொத்துக்கள் ஏற்கனவே வாய்மொழி 2015ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பாகப்பிரிவினை செய்யப்பட்டுவிட்டது என பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்துள்ள நிலையில், "Who affirm the fact should prove the same " என சாட்சிய சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, 2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் வாய்மொழி பாகம் சமுதாய பெரியோர்கள் முன்னிலையில் நடைபெற்றது என்பதை நிரூபணம் செய்ய வேண்டிய பொறுப்பு பிரதிவாதிகளையே சார்ந்தது ஆகும். எனவே, 2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் வாய்மொழி பாகம் நடைபெற்றதா? என்பது குறித்து தீர்வு காண வழக்காவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**16.** இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, இறந்துபோன அவரது மகன் தமிழ்செல்வனின் இறப்பு சான்றிதழ் பி.வா.சா.ஆ.1 ஆகவும், அவரது கணவர் ஹரிதேவனின் பெயரில் செலுத்திய சொத்துவரி ரசீது, குடிநீர் ரசீது, மின்கட்டண ரசீதுகள் பி.வா.சா.ஆ.3 முதல் 5 ஆவணங்களாகவும், புரோநோட்டு பி.வா.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி 1ம் பிரதிவாதியான பி.வா.சா.1 சாட்சி சுமதியை வாதிகள் தரப்பில் குறுக்கு

விசாரணை செய்யும்போது, அவர் தனது சாட்சியத்தில், " வாதிக்கு திருமணத்தின்போது என்ன நகை, சீர், சீராட்டுக்கள் செய்யப்பட்டது என எனக்கு நேரடியாக தெரியாது. 04.05.1970 ம் தேதிய பாகப்பிரிவினை ஆவணம் கணக்காய கவுடர் காலமான பின்னர் அவரது வாரிசுகளுக்கிடையே ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரிதான். கோபால் கவுடர் இறந்தபின்னர் அவருக்கு என் கணவர், அவரது தாயார் பார்வதி அம்மாள், மனைவி மாரியம்மாள், மகன் ஹரிதேவன், இவ்வழக்கு 1ம் வாதி நீலாவதி வாரிசுகள் என்றால் சரிதான். வழக்குச்சொத்திற்கு வலதுபுறம் உள்ள சொத்தை நடராஜ் என்பவருக்கு கிரையம் கொடுக்கும்போது, கோபாலின் வாரிசுகள் என்பதால்தான், தானும், வாதியும் சேர்ந்து கிரையம் எழுதிக்கொடுத்தோம். நாங்கள் கூட்டாக அனுபவித்து வந்ததால்தான் வாதி நீலாவதியுடம் கையொப்பம் பெற்றோம் என்றால் சரிதான். நீலாவதிக்கு நாங்கள் வீடு வாங்கிக்கொடுத்தோம் என்பதற்கு எழுத்துப்பூர்வமான ஆவணம் உண்டா? என்றால் இல்லை" என சாட்சியமளித்துள்ளார்.

**17.** மேற்படி 1ம் பிரதிவாதி சுமதியினுடைய ஒப்புக்கொள்ளப்பட்ட வாய்மொழி சாட்சியத்தை ஒருங்கிணைந்து பரிசீலனை செய்யும்போது, கோபால் கவுடருக்கு வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணப்படி கிடைத்த சொத்தில் நடைபாதையை வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் கிரையம் எழுதிக்கொடுக்கும்போது 1ம் வாதி நீலாவதிக்கு உரிமையிருந்ததால்தான், அவரும் சேர்ந்து வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ள விவரம் தெரியவருகிறது. மேலும், பிரதிவாதிகள் தரப்பில் வாதிக்கு தனியாக ஒரு வீடு வாங்கிக்கொடுக்கப்பட்டதாக பிரதான எதிர்வாதம் செய்யப்பட்டுள்ள நிலையில், 1ம் பிரதிவாதி தனது சாட்சியத்தில், 1ம் வாதிக்கு தனி வீடு வாங்கிக்கொடுத்தது சம்பந்தமாக ஆவணங்கள் இல்லை என சாட்சியமளித்துள்ளார். எனவே, 2015 டிசம்பர் மாதம் நடைபெற்ற பஞ்சாயத்தில் 1ம் வாதிக்கு அவர் பெயரில் வாங்கிய வீடு ஒதுக்கப்பட்டது என முன்னிறுத்தப்பட்ட வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**18.** மேலும், சொத்துரிமை மாற்றுச்சட்டம் பிரிவு–54ன்படி ரூ.100/–மதிப்பிற்கு மேல் உள்ள சொத்து பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மூலமாக உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டுமென சட்டம் உள்ள நிலையில், பிரதிவாதிகள் சொல்வதுபோல், 1ம் வாதிக்கு தனியாக வீடு வாங்கிக்கொடுத்திருந்தால், அந்த வீட்டின் கிரைய

ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார்கள். ஆனால், 1ம் வாதி பெயரிலுள்ள எந்தக் கிரைய ஆவணமும் பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாத நிலையிலும், 1ம் வாதிக்கு வீட்டை 1ம் பிரதிவாதியின் கணவர் ஹரிதேவன்தான் கட்டிக்கொடுத்தார் என்பதை நிரூபணம் செய்ய ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாத நிலையிலும், 2015 டிசம்பர் மாதம் நடைபெற்ற வாய்மொழி பாகப்பிரிவினையில், 1ம் வாதி பெயரில் பெற்ற வீடு அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது என பிரதிவாதிகள் தரப்பில் முன்னிறுத்தப்பட்ட வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**19.** மேலும், பிரதிவாதிகள் தங்களுடைய எதிர்வழக்குரை 19வது பத்தியில், 2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் கோபால்கவுடர் குடும்பச்சொத்துக்களைப் பொறுத்து, ஒரு பஞ்சாயத்து கூடலூரைச்சேர்ந்த பி.வா.சா.2 சிவக்குமார், முருகன்,த/பெ.ராமலிங்கம், முருகன்,த/பெ.ராஜ்கவுடர் ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெற்று, வழக்குச்சொத்துக்கள் ஹரிதேவனுக்கும், 1ம் வாதி பெயரில் கிரையம் வாங்கிய வீடு அவருக்கும் ஒதுக்கப்பட்டது என பிரதான எதிர்வாதம்(pleading)செய்யப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கில் பி.வா.சா.2 சிவக்குமாரைத்தவிர, மற்ற 2 சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. அதற்கான காரணத்தையும், பிரதிவாதிகள் தரப்பில் தெளிவுபடுத்தப்படவில்லை.

**20.** மேலும், பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட சிவக்குமார் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், " வீட்டுக்கு வடக்குப்பக்கம் உள்ள இடத்தை கோபாலின் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து விற்பனை செய்துள்ளார்கள். நீலாவதிக்கு உரிமை உள்ள காரணத்தினால்தான், அந்த சொத்தை விற்பனை செய்யும்போது, அவரிடம் கையொப்பம் வாங்கினார்கள். பஞ்சாயத்து பேசியதை எழுத்துப்பூர்வமாக எழுதவில்லை." என சாட்சியமளித்துள்ளார். மேற்படியாரின் வாய்மொழி சாட்சியத்தை பரிசீலனை செய்யும்போது, வழக்குச்சொத்து சம்பந்தமாக 1ம் வாதிக்கும், பிரதிவாதிகளுக்குமிடையே பிரச்சனை ஏற்பட்டு, 04.08.2015ல் 1ம் வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்னர்தான், பஞ்சாயத்து நடைபெற்றது என பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்துவரும் நிலையில், பஞ்சாயத்தில் பேசி முடிக்கப்பட்ட குடும்ப பாக விவரம் குறித்து எழுத்துப்பூர்வமான ஆவணம் எதுவும் எழுதப்படாத நிலையில், பி.வா.சா.2ன் உடைய

சாட்சியம் நம்பக்கூடிய வகையில் இல்லை.

**21.** மேலும், இவ்வழக்கில் 2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் வாய்மொழி பாகப்பிரிவினை நடந்து முடிந்துவிட்டதாக பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்துள்ள நிலையில், அவர்களுடைய கட்சிப்படி, 2015ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு பின்னர் 1ம் வாதிக்கு ஒதுக்கிய வீடுதவிர, வேறு சொத்துக்களில் உரிமை கிடையாது. ஆனால், எதற்காக மேற்படி வாய்மொழி பாகம் 2015ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடந்த பின்னர் 18.02.2020ல் சரண்யாவிற்கு கிரையம் கொடுக்கும்போது 1ம் வாதி நீலாவதியிடம் கையெழுத்து வாங்கப்பட்டது என்பது குறித்து பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித விளக்கங்களும் இல்லை. எனவே, வா.சா.ஆ.2 ஆவணத்தை 18.03.2020ம் தேதியில் 1ம் வாதி, பிரதிவாதிகளுடன் சேர்ந்து எழுதிக்கொடுத்ததிலிருந்தே கோபால் கவுடர் குடும்பத்தில் அவரது சொத்துக்கள் குறித்து 2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் எவ்வித வாய்மொழி பாகப்பிரிவினையும் நடைபெறவில்லை என வாதிகள் தரப்பில் முன்னிறுத்தப்பட்ட வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவே உள்ளது.

**22.** ஆகையால், மேலே தீர்வு கண்டபடி வா.சா.1 வாய்மொழி சாட்சியத்தின்படியும், வா.சா.ஆ.1, 2 ஆவண சாட்சியம் மூலமும் பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1,2 சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ததன்மூலமும், வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணப்படி கோபால் கவுடருக்கு பாத்தியப்பட்ட சொத்தைப்பொறுத்து, அவர் யாதொரு ஆவணமும் எழுதிவைக்காமல் (intestate)ஆக காலமாகிவிட்ட படியாலும், அவரது மனைவி மற்றும் தாயார் இறந்துவிட்ட நிலையில், அவரது மகனான இறந்துபோன ஹரிதேவனுக்குரிய ½ பங்கு பிரதிவாதிகளுக்கும், மகளான 1ம் வாதி நீலாவதிக்குரிய ½ பங்கும் அவரது வாரிசுகளான 2,3 வாதிகளுக்கும் கிடைக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானித்து, அதைப்பொறுத்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து, இந்த 1 முதல் 3 எழுவினாக்களுக்கு தீர்வு காணப்படுகின்றது.

**23. <u>எழுவினா4 ற்கான தீர்வு:–</u>**

வழக்கு தரப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன என்பது குறித்து தீர்வு காண வழக்காவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. இந்நீதிமன்றம் ஏற்கெனவே எழுவினாக்கள் 1 முதல் 3ல் வழக்கு தரப்பினர்களின் பிரச்சனை குறித்து தீர்வு கண்டுள்ள நிலையில் இந்த எழுவினாவில் வழக்கு

தரப்பினர்களுக்குரிய வேறு பரிகாரம் குறித்து தீர்வு காண வேண்டிய அவசியம் இல்லை என்றும், உபய வாதிகளின் சமூக சூழ்நிலையை கருத்தில் கொண்டு வழக்கின் செலவு தொகை வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் இந்த எழுவினாவிற்கு தீர்வு காண்கிறது.

**24. முடிவில், அசல்வழக்கு கீழ்க்கண்டவாறு அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகின்றது.**

| | |
|---|---|
| (i) | வழக்குரைச்சொத்தில் 1ம் வாதிக்குரிய ½ பாக பங்கு உரிமை அவரது வாரிசுகளான 2,3 வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து அதைப் பொறுத்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. |
| (ii) | மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Civil appeal No.6406-6407/2010 in Kattukandi Edathil Krishnan and another vs. Kattukandi Edathil Vasan and others dated 13.06.2022ல் பிறப்பித்த முன் தீர்ப்பில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட அன்றே இறுதிநிலை தீர்ப்பாணைக்காக வழக்கை ஒத்தி வைக்க வேண்டும் என்றும், இறுதிநிலை தீர்ப்பாணைக்கு தனியாக மனு தாக்கல் செய்ய வேண்டாம் என உத்தரவிட்டதன் அடிப்படையில் இறுதிநிலை தீர்ப்பாணைக்கு பிராது சொத்துக்களைப் பொறுத்து வாதியோ அல்லது மற்ற பங்குதாரர்களான பிரதிவாதிகளோ மனு தாக்கல் செய்ய வழக்கு 05.10.2026 அன்று ஒத்தி வைத்து உத்தரவிடப்படுகிறது. |
| (iv) | தாவா தரப்பினர்களின் உறவுமுறைகளை கருத்திற்கொண்டு செலவுத்தொகை பற்றிய உத்தரவு ஏதுமில்லை. |

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரிடையாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரி பார்க்கப்பட்டு 12.08.2026ம் நாள் இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M SHIVAJI CHELLIAH Digitally signed by M SHIVAJI CHELLIAH

**சார்பு நீதிபதி,**

**உத்தமபாளையம்.**

<u>வாதிகள் தரப்பு சாட்சி :</u>

வா.சா.1 ... நீலாவதி – 1ம் வாதி

வா.சா.2 ... குமரேசன் –2ம் வாதி

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :–</u>

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 04.05.1970 | பாகப்பிரிவினை ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 18.03.2020 | சரண்யா பெயரிலுள்ள கிரைய ஆவணம் | சான்றிட்ட நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :</u>

பி.வா.சா.1 ... சுமதி – 1ம் பிரதிவாதி

பி.வா.சா.2 ... சிவக்குமார் –3ம் நபர்

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :</u>

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 04.09.2015 | தமிழ்செல்வன் இறப்புச்சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 10.06.2000 | குமரேசன், 1ம் பிரதிவாதியின் மாமியார் மாரியம்மாளுக்கு எழுதிக்கொடுத்துள்ள பிராமசரி நோட் | அசல் |
| பி.வா.சா.ஆ.3 | 13.06.2020 | ஹரிதேவன் பெயரில் செலுத்திய சொத்துவரி ரசீது | அசல் |
| பி.வா.சா.ஆ.4 | 11.06.2020 | ஹரிதேவன் பெயரில் செலுத்திய குடிநீர் வரி ரசீது | அசல் |
| பி.வா.சா.ஆ.5 | 03.05.2020 | ஹரிதேவன் பெயரில் செலுத்திய மின்கட்டண ரசீது | அசல் |

M SHIVAJI CHELLIAH Digitally signed by M SHIVAJI CHELLIAH

**சார்பு நீதிபதி,**

**உத்தமபாளையம்.**

**Sub Court, UPM**

**O.S.No.105/2022**
**Fair Judgment**
**Dated.12.08.2026**